2011 செப்டம்பர் 8]

99—

பராமரிப்பு

***795—திரு. கே.பி. கந்தன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, கோவிலம்பாக்கம் ஊராட்சி, சுண்ணாம்புக் குளத்தூரிலுள்ள காகிதபுரம், பாக்கியலெட்சுமி நகர், பவானி நகர், மணிமேகலை நகர் மற்றும் ராஜா நகர் ஆகிய பகுதிகளிலுள்ள ஓடைகளைச் சீரமைத்து, இரு கரைகளையும் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, கோவிலம்பாக்கம் ஊராட்சி, சுண்ணாம்புக் குளத்தூரிலுள்ள காகிதபுரம், பாக்கியலெட்சுமி நகர், பவானி நகர், மணிமேகலை நகர் மற்றும் ராஜா நகர் ஆகிய பகுதிகளிலுள்ள ஓடைகளைச் சீரமைத்து, ஓடைகளின் இரு கரைகளையும் உயர்த்த, கருத்துருவுடன்கூடிய மதிப்பீடு, தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம் அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சோழிங்கநல்லூர் தொகுதி, கோவிலம்பாக்கம் ஊராட்சி, சுண்ணாம்புக் குளத்தூரிலுள்ள காகிதபுரம், பாக்கியலெட்சுமி நகர், பவானி நகர், மணிமேகலை நகர் மற்றும் ராஜா நகர்

ஆகிய பகுதிகளிலுள்ள ஓடைகளைச் சீரமைத்துத் தூர் வாரும் பணிக்கு ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தொகுதியின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதியில், கோவிலம்பாக்கம் ஊராட்சியில் ஐந்து இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மழைக் காலங்களில் அடிக்கடி ஓடையிலிருந்து தண்ணீர் வெளியேறி உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கத்திலுள்ள ராம் நகர், எல்.ஐ.சி. நகர் போன்ற பல பகுதிகளில் மழை நீர் செல்வதால், அங்குள்ள மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, மேற்படி இடங்களிலுள்ள ஊர்களுக்கு வரும் ஓடைகளை அகலப்படுத்தி, இருபுறமும் கரைகளில் சுவர் எழுப்பி, பொது மக்களைப் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதோடு, இதற்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை குறித்து ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*